26th March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அந்தப்பள்ளியிலே நுழைந்து அங்கேயிருந்த சாமான்களையெல்லாம் நொறுக்கி, ஆசிரியர்களை யும் மாணவர்களையும் அடித்திருக்கிறார்களே, அதுபற்றி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்.?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளி சம்பந்தப்பட்ட வரையில் நட வடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னேன். போலீசில் மனுக்கொடுத் திருந்தால் அந்த நிலவரத்திற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுத்திருப் பார்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாவட்டக் கலெக்டர் அவர்களுக்குப் பள்ளி தலைமை ஆசிரியர் இது பற்றி எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத் தின் நகல் கூட எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்திற்குச் சரியான முறையில் தகவல் வரவில்லை என்று சொல்வது உண்மையல்ல.. அது பற்றி கலெக்டர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பதிலைச் சரியாகக் கவனித்திருந்தால் அரசாங்கத்திற்கு வந்த தகவல் சரியானதாகத் தெரிந்திருக்கும். கல்வித்துறை சம்பந்தப்பட்ட வரையில் எதுவும் இல்லாததால் நட வடிக்கை இல்லை. போலீஸ் துறைக்கு இது சார்பாக எழுதியிருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

Fisheries and Navigation Technology

* 224 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of students in the Three-Year diploma course of Fisheries and Navigation Technology taught in Central Technological Institute, Madras;

(*b*) whether the 45 persons, who studied during the last three years, are unemployed ;

(*c*) whether 15 students are trained every year; and

(*d*) whether the candidates cannot be employed elsewhere other than Fisheries Department ?

கயல் நுணுக்க கலமியக்குமியல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மத்திய தொழில் நுட்ப கூடத்தில் கயல் நுணுக்க கலமியக்குமியல் (Fisheries and Navigation Technology) என்ற மூன்றாண்டு டிப்ளமாவுக்கு ஆண்டுக்கு எத்தனை பேர் படிக்கிறார்கள்?

(இ) சென்ற மூன்றாண்டுகளாகப் படித்த 45 பேர் வேலையின்றி யிருக்கிறார்களா ?

(உ) இன்னும் ஆண்டுக்கு 15 பேருக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறதா?

(எ) இவர்கள் மீன் இலாகா தவிர வேறு எங்கும் வேலை பார்க்க இயலாதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 15 மாணவர்கள்.

(இ) 15 பேருக்குத் தனியார் துறையிலும், மத்திய, மாநில அரசு களிலும் வேலை கிடைத்துவிட்டது. 5 மாணவர்கள் சிறப்புப் பாட முறைகள் பயிலுகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் படிப்பை முடித்த பிற மாணவர்களைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லை.

(உ) ஆம்.

[26th March 1969

(எ) மீன்களை உறைய வைத்தல், மேற்குக் கடற்கரையில் பதப் படுத்தி டப்பாக்களில் அடைத்தல், தொழிலில் பல தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் அவர்களுக்கு வேலை கிடைக்கலாம். பச்சை மீன்களையும் பதப்படுத்தி டப்பிகளில் அடைக்கப்பட்ட மீன்களையும் அங்காடி களுக்கு அனுப்பி விற்பனை செய்வதிலும், விசைப்படகுகளின் மூலம் மீன் பிடிப்பதிலும் தங்கள் சொந்த தொழில்களை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள லாம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தனியார் துறையில் அவர்களுக்கு வேலை கொடுக்கத் தக்க நிலை எப்படியிருக்கிறது? அவர்கள் என்ன வேலை செய்வதற்குக் கொடுக்கிறார்கள் ? அத்தகைய தொழிற்சாலைகள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு நம் ராஜ்யங் களில் எங்கெங்கு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறையில் என்னென்ன தொழிற்சாலைகள் எங்கெங்கு இருக்கின்றன என்ற விவரம் இல்லை. அந்தப் படிப்பைப் படிக்கிறவர்களுக்கு, அரசாங்கத்திலுள்ள வேலை வாய்ப்பை விட தனியார் துறையில் மீன் பதனிடும் தொழில் நடத்துவதற்கும் அதில் சேருவதற்கும் வாய்ப்பிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு எத்தனை பேருக்கு விசைப் படகு வாங்கக் கடன் கொடுத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உணவு அமைச்சரிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்.

School Manager and Correspondent

* 225 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the qualifications prescribed for the Manager and Correspondent of Educational Institutions according to the rules ;

(*b*) whether it has been brought to the attention of the Government that the Manager of Madurai Workers' Welfare Organisation High School, underwent 1½ years' imprisonment for criminal charges; and

(*c*) if so, the action taken thereon by the Government ?

பள்ளி நிர்வாகி, தொடர்பாளர்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகியாகவோ (**Manager**) தொடர் பாளராகவோ (**Correspondent**) இருப்பவர்களின் தகுதிகள், விதி முறைப்படி யாவை ?

(இ) மதுரை தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப்பள்ளி நிர்வாகி 1½ வருடங்கள் கிரிமினல் குற்றங்களுக்காக சிறை தண்டனை அனுபவித்தவர் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தொடக்கப்பள்ளிகள் சம்பந் தப்பட்ட விதிகளில் 12-பி விதியின்படி அரசு மானியம் பெறும் தொடக்கப் பள்ளியில் தொடர்பாளர் கற்றறிந்தவராகவும் கல்வி